பக்கங்கள்: 09

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 10 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 25 செவ்வாய்க்கிழமை 11.11.2025 கதிர் 003



**இனி இது ரகசியம் அல்ல!**

ரெலோ உறுப்பினர்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியிலும் அதன் தலைமைக் குழுவில் இருந்த 13 உறுப்பினர்கள், தலைவராகச் செல்வம் அடைக்கலநாதன் ☞ 2

# அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட ரூ. 46 பில்லியன் திரும்பியது

## அனுராத ஜயரத்ன எம்.பி. இடித்துரைப்பு

2025 வரவுசெலவுத் திட்டத்தில் முன்மொழிவுகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் 46 பில்லியன் ரூபா செலவிடப்படாமல் திறைசேரிக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. இவ்வாறு நிதியைச் சேமித்து, சர்வதேச நாணய நிதியத்திற்கு முதன்மை உபரியை 2.3வீதமாகக் காண்பிப்பதன் மூலம் எந்த விளைவையும் அடைய முடியாது என எதிர்க்கட்சி உறுப்பினர் அனுராத ஜயரத்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் அடுத்த வருடத்துக்காக அரசுத் தலைவரால் முன்வைக்கப்பட்ட வரவு செலவு திட்ட உரை மீதான முதலாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வரவுசெலவுத்திட்டம் இரண்டுபிரிவுகளைக்கொண்டுள்ளது. வரவு செலவுத் திட்ட ஆவணத்தின் ஒரு பகுதி வெளி உலகிற்கு ஏற்ற வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலகவங்கியின் எதிர்பார்ப்புகள் இந்த வரவு செலவுத் திட்ட உரையில் உள்ளடங்கியுள்ளன. முதன்மை உபரி 2.3 என்ற கூற்று இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதமாக இந்த வரவு செலவுத் திட்டம் அமைந்துள்ளதா? முதன்மை உபரி அதிகரிப்பை மகிழ்ச்சிக்கான காரணமாக எடுத்துக்கொள்ள முடியுமா? ☞ 2

# போலிக் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதைத் தவிருங்கள்

**எதிர்க் கட்சியினரிடம் அமைச்சர் கோரிக்கை**

அரசுத் தலைவரால் முன்வைக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் எதிர்க்கட்சியினர் முன்வைக்கும் சிறந்த யோசனைகளை ஏற்றுக்கொள்வோம். குறுகிய அரசியல் நோக்கத்தை முன்னிலைப்படுத்தி போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதை எதிர்க்கட்சியினர் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று சுற்றாடல் துறை அமைச்சர் தம்மிக படபெந்தி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வரவு - செலவுத் திட்ட மீதான விவாதத்தில் உரையாற்றும் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் அனைவரும் விமர்சனங்களையும், குற்றச்சாட்டுக்களையும் மாத்திரமே ☞ 2

# சரத்பொன்சேகாவை சாட்சியாகக் கொண்டு வெள்ளைக்கொடி வழக்கை விசாரியுங்கள்

**ஸ்ரீநேசன் எம்.பி. ஆளும்தரப்பிடம் வலியுறுத்து**

முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஒரு சாட்சியமாக மாறி இசைப்பிரியா படுகொலை, வெள்ளைக்கொடியுடன் சரணடைந்தவர்கள் படுகொலைகள் தொடர்பில் தொடர்புப்பட்டவர்களை வெளிப்படுத்தியிருப்பதால் சரத்பொன்சேகாவை ஒரு முக்கிய சாட்சியாகக் கொண்டு இந்த ஆளும்தரப்பு இவ்விடயங்களை உடனடியாக ஆராய வேண்டும் எனத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன் வலியுறுத்தினார்

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் நாட்டில் குண்டு விழ, குண்டுவிழ அதிகரித்த வரவு செலவுத் திட்ட துண்டுவிழும் தொகை இம்முறை குறைந்துள்ளது. 2025ஆம் ஆண்டில் துண்டுவிழும் தொகை 6.5 வீதமாகவிருந்த நிலையில் இம்முறை அது 6.2 வீதமாக்கக குறைந்துள்ளது. இது ஒரு சாதகமான விடயம். நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் 4.8 வீதத்தால் அதிகரித்துள்ளது .

இந்த ஆளும்தரப்பு ஊழல், மோசடி, இலஞ்சம், போதைவஸ்து, பாதாள உலகள் என்பவற்றைக் கட்டுப்படுத்திக்கொண்டு வருகின்றது. அதேவேளை இந்த நாட்டில் சட்டவாட்சி நடைபெற வேண்டும். மக்களைமையமாககொண்ட ☞ 6

# மாகாண சபைத் தேர்தல் அடுத்த வருடம் நடக்காது

**எதிர்க் கட்சி எம்.பி. ஆரூடம்**

வரவு செலவு திட்டத்தில் எதிர்ப்பார்ப்புக்களே அதிகமாகும். ஆனால் அந்த எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற எந்த யோசனையும் அதில் இல்லை. அதேநேரம் ஆளும்தரப்பு கடந்த வருடம் ஒதுக்கிய நிதியில் பல வேலைத்திட்டங்கள் நிறைவு செய்யப்படாமல் அந்த நிதி மீண்டும் திறைசேரிக்கு சென்றுள்ளது. இவர்களின் இயலாமையே இதற்குக் காரணமாகும். அதனால் ஆளும்தரப்பு தேர்தல் ஒன்றை நடத்தினால் ☞ 2

**சட்டபூர்வமற்ற**

# தொடருந்து குறுக்குப் பாதைகள் வடக்கில் அகற்றப்படவேண்டும்

**அமைச்சர் பிமல் ரத்நாயக்க இறுக்கம்**

வடக்கில் சட்டபூர்வமற்ற ரீதியில் அமைக்கப்பட்டுள்ள தொடருந்து குறுக்குப் பாதைகள் அகற்றப்படவேண்டும். அவ்வாறில்லாவிட்டால் தொடருந்து சேவைக்கு அது பெரும் பாதிப்பாக அமையும். அவ்வாறான பாதைகள் மக்களுக்கு அத்தியாவசியம் எனில் அதற்குப் பதிலாக சமாந்தரப் பாதைகளை அமைப்பது தொடர்பில் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்க முடியும். என போக்குவரத்து நெடுஞ்சாலைகள் ☞ 2

# இந்திய மீனவர்கள் 14 பேருக்கும் மறியல்

இலங்கைக்கடற்பரப்புக்குள் எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றத்திற்காக இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட 14 இந்திய மீனவர்களையும் நவம்பர் 24 வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து மீன்பிடிக்கப் புறப்பட்ட 14 மீனவர்கள் எல்லை தாண்டி இலங்கைக் கடற்பரப்புக்குள் மீன்பிடியில் ஈடுபட்ட வேளை நேற்று அதிகாலையில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் நேற்றுக் காலை காங்கேசன்துறை துறைமுகத்துக்கு அழைத்துவரப்பட்டு யாழ். மாவட்ட கடற்றொழில்நீரியல்வளத்திணைக்களத்தின் அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டனர்.

14 இந்திய மீனவர்களையும் நீரியல் வளத் ☞ 6

# அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைபோம்

**உணவுப் பாதுகாப்பு அமைச்சர் உறுதிமொழி**

பிணைமுறி மோசடி பற்றி அடிக்குறிப்பு எழுதியவர்கள் ஊழல் மோசடி பற்றிப் பேசுவது வேடிக்கையாகவுள்ளது. அத்தியாவசிய பொருட்களின் விலைகளைக் குறைத்து மக்களுக்கு நிவாரணமளிப்போம். 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் மக்களுக்கு பயனுடையதாகவே அமையும் என வர்த்தகம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற 2026ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

☞ 6

# பாடசாலை உபகரணங்கள் மீதான வரியைக் குறைப்பது அவசியம்

**சானக எம்.பி. கருத்து**

பாடசாலை மாணவர்களுக்கு அடுத்தாண்டு முதல் 6000 ரூபா வழங்குவதாக அரசுத் தலைவர் குறிப்பிடுகிறார். இந்த 6000 ரூபாய் கொடுப்பனவு சகல மாணவர்களுக்கும் கிடைப்பதில்லை. ஆகவே பாடசாலை உபகரணங்கள் மற்றும் எழுதுவினை பொருட்கள் மீதான 'வற்' வரியை ஆளும்தரப்பு குறைக்க வேண்டும் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சானக சம்பத் மாதுகொட தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த கால ஆளும்தரப்புக்கள் சமர்ப்பித்த வரவு - செலவுத் திட்டத்தை போன்றுதான் இந்த வரவு - செலவுத் ☞ 6

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

அடுத்த ஜனவரி மாதம் நடக்கவுள்ள கட்சியின் பேராளர் மாநாடு வரையில் தொடர்வதற்கு அனுமதிப்பதற்கு முடிவு செய்தனர். இதன் விளைவை அவர்கள் மிக விரைவில் அனுபவிப்பார்கள் என்று அறிய முடிகின்றது.

ரெலோ தலைவரால் தொலைபேசியில் மிரட்டப்பட்டவரான சுரேஸ் எனப்படும் கட்சி உறுப்பினர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டது தொடர்பான வழக்கை தேசிய புலனாய்வுத் துறையினர் துருவத் தொடங்கிவிட்டனர் என்கிற செய்தியை ஏற்கனவே இந்தப் பத்தியில் பகிர்ந்து கொண்டிருந்தேன். அயல்நாட்டுப்புலனாய்வுத் துறையினரும் இந்தச் சம்பவம் தொடர்பில் தீவிரமாக ஆராயந்தனர்.

செல்வம் அடைக்கலநாதன் சுரேஸை மிரட்டிய ஒலிப் பதிவுகளும் புலனாய்வாளர்களால் சேகரிக்கப்பட்டுள்ளன. கட்சித் தரப்பிலிருந்த சிலராலும் சுரேஸின் உறவினர் தரப்பிலிருந்தும் அவர்களுக்கு அந்தப்பதிவுகள் எல்லாம் அனுப்பப்பட்டுள்ளன. அவை கவனமாக ஆராயப்பட்ட பின்னர் நடவடிக்கைகள் தீவிரமாவதற்கான அறிகுறிகள் தெரிகின்றன.

அந்த ஒலிப் பதிவுகளில் ‘உன்னைச் சும்மா விடமாட்டேன்டா, மவனே!’, ‘பழி வாங்கியே தீருவேன்’ என்றெல்லாம் செல்வம் அடைக்கலநாதன் வீர வசனங்கள் பேசியுள்ளார். இந்தப் பின்னணியில் சுரேஸ் திடீரென தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருக்கிறார். அவரது இறப்பு தற்கொலை என்ற ரீதியில் பொலிஸாரால் அணுகப்பட்டாலும் அவர் தற்கொலை செய்துகொள்வதற்கு முன்னதாக கட்சித் தலைவரால் அச்சுறுத்தப்பட்டிருக்கிறார் என்பது மிகப் பாரதூரமானதாக மாறியுள்ளது. இது பற்றி தீவிர ஆலோசனைகள் நடந்து வருகின்றன.

செல்வம் அடைக்கலநாதன் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருப்பதன் காரணமாக அவரைக் கைது செய்வதற்கு முன்னர் மேற்கொள்ளப்படவேண்டிய சம்பிரதாயபூர்வ நடவடிக்கைகள் பலவுள்ளன. சபாநாயகரின் அனுமதி பெறுவது உள்ளிட்ட பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டியவனவாக உள்ளன. இவை முடிந்ததும் விரைவில் அவர் கைது செய்யப்படுவதற்கான வாய்ப்புக்களே அதிகம் உள்ளன.

அப்படி அவர் கைது செய்யப்பட்டு உள்ளே போகும்போது, அதனால் கட்சிக்கு ஏற்படும் அவப் பெயருக்கும் பாதிப்புக்கும் அவரை ஜனவரி வரையில் தலைமைப் பதவியில் இருத்தி அழகு பார்க்க விழைந்த தலைமைக் குழுவின் 13 பேரும்தான் பதில்சொல்ல வேண்டியிருக்கும். இவையெல்லாம் நடப்பதற்கு முன்பாக கட்சியையும் காப்பாற்றி, தமது அரசியலையும் காப்பாற்றுவதற்கான வாய்ப்பை அவர்கள் பயன்படுத்திக்கொள்வதே நல்லது என்பது எனது கருத்து. இந்தப் பிரச்சினை பூதாகாரமாகும்போது இன்று வாய்மூடி இருக்கும் முதன்மை ஊடகங்களும்கூட இந்தப் பிரச்சினையைப் பேசவேண்டிய நிர்ப்பந்தங்களுக்கு உள்ளாகும். அப்போது ஏற்படப்போகும் இழப்பை தலைமைக் குழுவில் செல்வத்தின் மானத்தைக் காத்த 13 உறுப்பினர்களாலும் தடுக்க முடியாமல் போகும். அதற்கு முன்பதாக அவர்கள் சுதாகரித்துக்கொள்வதே சிறந்தது.

கெடுகுடி சொற்கேளாது என்பது தெரிந்திருந்தாலும் சொல்லவேண்டியதும் எச்சரிக்கவேண்டியதும் எமது கடமையல்லவா. கட்சி மட்டுமல்ல செல்வம் இடம்பெற்றுள்ள கூட்டணி மற்றும் கூட்டு ஒப்பந்தக் கூட்டாளிகளும் இது விடயத்தில் கவனம் செலுத்தி தமது அரசியலைப் பாதுகாக்கத் தவறினார்கள் என்றால் மாகாண சபைத் தேர்தலில் நாறிப் போவது உறுதி.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## அபிவிருத்திக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடு அதன் அபிவிருத்தித் தேவையான நிதியைச் செலவிடாமல் வைத்திருந்தால், முதன்மை உபரி பற்றிய கூற்று யதார்த்தமானதாக அமையாது. 2025 வரவு செலவுத்திட்ட ஆவணத்தில் உள்ள திட்டங்களை நாம் பரிசீலிக்கும்போது மட்டுமே இதை நாம் புரிந்துகொள்ள முடியும். 2025 வரவுசெலவுத் திட்டத்தில் முன்மொழிவுகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் 46 பில்லியன் ரூபா செலவிடப்படாமல் காணப்படுகின்றது. இதுபோன்ற பல திட்டங்களை உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

2025 ஆம் ஆண்டு ஒதுக்கீட்டுச் சட்டத்தில் கிராமிய உட் கட்டமைப்பிற்காக 4000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தாலும், 272 மில்லியன் ரூபா மட்டுமே செலவிடப்பட்டுள்ளது. 93வீத ஒதுக்கீடுகள் திறைசேரிக்கு மீள அனுப்பப்பட்டுள்ளன. உற்பத்திப் பொருளாதாரம் குறித்துப் பேசும் ஆளும்தரப்பு, கெரவலப்பிட்டிய சுங்க முனையத்தை நிர்மாணிக்க 2025 வரவு செலவுத் திட்டத்தில் 500 மில்லியன் ரூபா ஒதுக்கியது. வெயங்கொடை கொள்கலன் முனையத்துக்கு 500 மில்லியன் ரூபா ஒதுக்கியிருந்தது. இதன் முன்னேற்றம் 0 வீதமாகும்.

ஆளும்தரப்பு டிஜிட்டல் பொருளாதாரம் குறித்துப் பேசுகிறது. அது நாட்டின் எதிர்காலம் என்று கூறுகிறது. ஆளும்தரப்பு 15 பில்லியன் டொலர் டிஜிட்டல் பொருளாதாரம் குறித்துப் பேசுகிறது. டிஜிட்டல் அடையாள அட்டையை உருவாக்க முதல் கட்டமாக, கடந்த ஆண்டு 183 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. அதன் முன்னேற்றம் என்ன? 0.1 வீதமாகும். 99.9 வீதம் செலவிடப்படவில்லை.

கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மாற்றுத்திறனாளிகளின் தேவைகளுக்காக 300 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. செலவு 0 வீதமாகும். இளம் தொழில்முனைவோரை உருவாக்க 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. அதன் முன்னேற்றம் 0 வீதமாகும்.. நன்னீர் மீன்பிடித் துறைக்கு 200 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. இதன் முன்னேற்றம் 0 வீதமாகும். இவ்வாறு நிதியைச் சேமித்து, சர்வதேச நாணய நிதியத்திற்கு முதன்மை உபரியை 2.3 வீதமாகக் காண்பிப்பதன் மூலம் எந்த விளைவையும் அடைய முடியாது - என்றார்.

## மாகாண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமையைத் தெரிந்துகொள்ளலாம். அதனால் மாகாணசபை தேர்தலை ஆளும்தரப்பு அடுத்த வருடம் நடத்தப்போவதில்லை என எதிர்க்கட்சி உறுப்பினர் சுஜிவ சேனசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு செலவு திட்ட உரை மீதான இரண்டாம்நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளும்தரப்புக்கு இதற்கு முன்னர் ஆட்சி செய்த அனுபவமில்லை. என்றாலும் தேர்தல் காலத்தில் இவர்கள் மக்களுக்கு அளித்துவந்த வாக்குறுதிகள் மீது மக்கள் நம்பிக்கை வைத்து, இவர்களுக்கு ஒரு தடவை கொடுத்துப் பார்ப்போம் என்றே மக்கள் இந்த ஆளும்தரப்புக்கு ஆட்சி வழங்கி இருக்கின்றனர். தற்போது மக்கள் அதுதொடர்பில் கவலைப்படுகின்றனர்.

அரசுத் தலைவர் அடுத்த வருடத்துக்காகச் சமர்ப்பித்திருக்கும் வரவு செலவு திட்டத்தில் எதிர்பார்பாக்கப்படும் விடயங்களே அதிகமாக இருக்கின்றன. ஆனால் இந்த எதிர்பார்ப்புக்கள் நிறைவேறுவதற்கு வாய்ப்பில்லை. ஏனெனில் நாடொன்றின் அபிவிருத்திக்குப் பிரதானமாக 4 விடயங்கள் தேவைப்படுகின்றன. அதாவது வருமானத்தை அதிகரிப்பது, நேரடி முதலீடு, தொழில் உருவாக்குதல் மற்றும் நவீன தொழிநுட்பம். இவற்றை மேற்கொள்ள வரவு செலவு திட்டத்தில் இருக்கும் பிரேரணைகள் என்ன? இதனை அடைந்துகொள்ளாமல் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது.

கடந்த வருட வரவு செலவு திட்டத்தில் ஆளும்தரப்பு 11 சட்ட மூலங்களைச் சமர்ப்பித்திருந்தது. அதில் ஒன்றைக்கூட நாடாளுமன்றத்துக்கு கொண்டுவந்து நிறைவேற்றவில்லை. அதேபோன்று கடந்த வருடம் வரவு செலவு திட்டத்தில் பல்வேறு வேலைத் திட்டங்களுக்கு ஒதுக்கிய பணத்தை இவர்களுக்கு செலவழிக்க முடியாமல் போயிருக்கிறது. இவை மக்களுக்கு வழங்கவேண்டிய சேவைகளை நிறைவேற்றத் தவறிய குற்றத்துக்காக சிறைக்குச் செல்லக்கூடிய தவறாகும். ஒதுக்கப்பட்ட நிதியை செலவழிக்காமல் இருந்தால் எப்படி நாட்டில் அபிவிருத்தி ஏற்படும்? இவர்களுடன் வேலை செய்யமுடியாது எனக் கடந்த ஒருவருடத்தில் 26 அதிகாரிகள் பதவிலிருந்து விலகியுள்ளனர். ஒருபோதும் இவ்வாறு இடம்பெற்றதில்லை.

நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்தபோது ரணில் விக்ரமசிங்க, பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்தார். அதனை நாங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். அன்று எமது பொருளாதார வளர்ச்சியைப் பார்த்து உலக வங்கி பாராட்டி இருந்தது. 2025.4.22 உலக வங்கியின் அறிக்கையின் பிரகாரம் நாட்டின் வறுமை நூற்றுக்கு 22வீதம். இன்றைய நிலை தொடர்ந்தால் வறுமை நூற்றுக்கு 32 வீதமாகலாம். 293 ரூபாவுக்கு இருந்த டொலர் தற்போது 307 ரூபா. இவ்வாறு இருக்கையில் ‘அஸ்வெசும’ நிவாரணம் கேட்பவர்கள், யாசகம் கேட்பவர்களாவர் என அமைச்சர் ஒருவர் தெரிவிக்கிறார். இவ்வாறு தெரிவிப்பதற்கு வெட்கப்படவேண்டும்.

எமது ஆளும்தரப்பில் தனியார் பல்கலைக்கழகம் அமைப்பதற்கு, மின் உற்பத்தி நிலையம் அமைப்பதற்கு, விமான நிலையம் அமைப்பதற்கு இவர்கள் இடமளிக்கவில்லை. எதிர்ப்புத் தெரிவித்து அனைத்துக்கும் ஆர்ப்பாட்டம் செய்தனர். இன்று இவர்கள் அதனைச் செய்கின்றனர். அரசுத் தலைவர் முன்வைத்திருக்கும் வரவு செலவு திட்டத்தை பார்க்கும்போது நாணய நிதியத்தின் பிரதானி முன்வைத்திருப்பதுபோல் இருக்கிறது. நாணய நிதியத்திடம் கடன் எடுத்ததை நாங்கள் எதிர்ப்பதில்லை. அவர்கள் உதவியதாலே இன்று நாங்கள் தலைநிமிர்ந்து இருக்கிறோம். அதற்காக அவர்கள் தெரிவிக்கும் அனைத்தையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றிரில்லை.

மேலும் மக்களின் பணத்தை பெருளவில் இந்த ஆளும்தரப்பு துஸ்பிரயோகம் செய்கின்றனர். இங்கிலாந்துக்கு செல்ல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வந்த, அழைப்பிதழுக்கு ஆளும்தரப்பிலிருந்து 4 பேர் சென்றுள்ளனர். இது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளவேண்டும். அதேநேரம் இவர்கள் எகனமிக் வகுப்பில் சென்று, விமானத்தில் பறந்துகொண்டிருக்கையில் பிஸ்னஸ் வகுப்பில் சென்று அமர்ந்துள்ளனர். இது மக்களின் பணத்தை துஸ்பிரயோகம் செய்வதாகும். அந்த 4 பேரும் சிறைக்குச் செல்ல வேண்டி ஏற்படும். இவ்வாறான கீழ்த்தரமான செயலை மேற்கொள்ளக்கூடாது.

மேலும் இந்த ஆளும்தரப்பு 6 மாதங்களில் விழும் என நாங்கள் தெரிவித்தோம் என்று தெரிவிக்கின்றனர். நாங்கள் அவ்வாறு தெரிவித்தது உண்மை. ஆளும்தரப்பு ஆட்சிக்கு வருவதற்கு முன்னர், நாணய நிதியத்தின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. அதனை கிழித்தெறிவோம் என்று தெரிவித்தனர். அதற்குப் பதிலளித்தே நாங்கள் அவ்வாறு தெரிவித்தோம். ஆனால் இவர்கள் தங்களின் கொள்கையை மாற்றிக்கொண்டு, நாணய நிதியத்தின் நிபந்தனைகளை அவ்வாறே பின்பற்றிவருகின்றனர். இவர்கள் தொடக்கத்தில் தெரிவித்ததை செய்திருந்தால், 6 மாதங்களில் இந்த ஆட்சி வீழ்ச்சியடைந்திருக்கும்.

ஆளும்தரப்பு தேர்தல் ஒன்றை நடத்தினால் ஆளும்தரப்பின் நிலமையைத் தெரிந்துகொள்ளலாம். அதனால் மாகாண சபைத் தேர்தலை ஆளும்தரப்பு அடுத்த வருடம் நடத்தப்போவதில்லை - என்றார்.

## தொடருந்து.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் தொடருந்து பாதைக்கான சட்டபூர்வமற்ற குறுக்கு வீதிகளே பாதிக்கப்பட்டுள்ள நிலையில் காணப்படுகின்றன. சட்டபூர்வமான இரண்டு குறுக்குப்பாதைகளே பொலிசாரின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளன. வவுனியாவுக்கும் புளியங்குளத்துக்கும் இடையிலான சட்டபூர்வமற்ற தொடருந்து குறுக்குப் பாதை அகற்றப்படவேண்டும் என்பதுடன் அவை பராமரிக்கப்படமாட்டாது. இவ்வாறான சட்டபூர்வமற்ற பாதைகள் கிராமவாசிகளினால் உருவாக்கப்பட்டவை. அந்த வகையிலான சட்டபூர்வமற்ற தொடருந்துக் குறுக்குப் பாதைகள் தொடர்பில் தொடருந்துத் திணைக்களம் பொறுப்பேற்காது.

அத்துடன் மஹவ-ஓமந்தை தொடருந்துத் கருத்திட்டத்தில் தொடருந்து பாதைகள் புனரமைக்கப்பட்டன. அப்பாதையில் 100 கிலோமீற்றர் வேகத்தில் தொடருந்து பயணிக்க முடியும். சட்டபூர்வமற்ற தொடருந்து குறுக்குப் பாதைகள் காரணமாக அந்தளவு வேகத்தை முன்னெடுக்க முடியாமல் உள்ளது. எனவே அத்தகைய சட்டபூர்வமற்ற தொடருந்து குறுக்குப் பாதைகள் அகற்றப்படவேண்டும்.

எனினும் மக்களின் போக்குவரத்து தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக தேவையான வசதிகளை வழங்க வேண்டியுள்ளதால் சமாந்தர பாதையை அமைப்பது தொடர்பில் பரிசீலனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதன் பிரகாரம் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபைகள் மூலம் தொடருந்து திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுத்தால் வரி அல்லது நிபந்தனை

அடிப்படையில் தொடருந்து திணைக்களமே பாதுகாப்பு பாதை முதல் தொடருந்து பாதை வரையான சமாந்தரப் பாதையை வழங்கக்கூடியதாகவிருக்கும்.

அத்துடன் சட்டபூர்வமற்ற தொடருந்து குறுக்குப் பாதைகள் அமைத்துள்ள பிரதேசங்களில் வீதி அபிவிருத்தி அதிகார சபையோ அல்லது உள்ளூராட்சி சபையோ மேம்பாலம் அமைப்பதற்கான மாற்று யோசனையை மேற்கொள்ள முடியும் - என்றார்.

அது தொடர்பில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம்

வடக்கில் போர் முடிவடைந்து வடக்குக்கான தொடருந்து பாதைகள் அமைக்கப்படும் வரை அந்தப் பிரதேசங்களில் மக்கள் மீள் குடியேறியிருக்கவில்லை. அதனால் நீண்ட காலமாக மக்கள் உபயோகப்படுத்திய தொடருந்து கடவைகள் கூட

மூடப்பட்டுள்ளன. அதற்குச் சிறந்த உதாரணம் ஓமந்தை தொடருந்து நிலைய பகுதி. அங்கு 400 வருடங்களுக்கு மேல் உபயோகிக்கப்பட்ட பாதை மூடப்பட்டு தொடருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பிரச்சனைகளுக்கு நிவர்த்தி காணும் வகையில் தொடருந்து திணைக்களமும் உள்ளூராட்சி சபைகளும் பேச்சு நடத்தி, அத்துடன் பொதுமக்களுடன் கலந்துரையாடி அடையாளப்படுத்தப்படும் வீதிகளை இந்த வருட வரவு செலவு திட்டத்தின் மூலம் பெற்றுக் கொடுக்க முடியுமா?

அத்துடன் தொடருந்து பாதைக்கு சமாந்தர பாதைகளை அமைப்பது தொடர்பிலும் நாம் விருப்பம் தெரிவிக்கின்றோம் என்றும் தெரிவித்தார்.

இவ்வாறான செயற்திட்டத்தின் மூலம் அந்த மக்களின் பிரச்சினைகளுக்கு நீண்ட காலம் எடுக்காது தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அது தொடர்பில் தெரிவித்த அமைச்சர், இந்தப் பிரச்சினை வடக்குக்கும் தெற்கிற்கும் வித்தியாசமானவை. வடக்கில் போர் இடம்பெற்ற காலங்களில் தொடருந்து சேவை இல்லாத காரணத்தினால் அங்குள்ள மக்கள் தமக்கு தேவையானவாறு இந்தக் குறுக்குப் பாதைகளை அமைத்துக் கொண்டுள்ளனர்.

தொடருந்து பாதை என்பது அதிவேக நெடுஞ்சாலை போன்ற ஒரு ‘ட்ரெக்’ ஆகும்.

அதன் நடுவில் இடைக்கிடை குறுக்குப் பாதைகள் இருக்குமானால் தொடருந்து சேவையின் மூலம் மக்கள் பெற்றுக்கொள்ளும் பயனை பெற்றுக்கொள்ள முடியாது போகும். வடக்கு மக்களும் தெற்கிலிருந்து விரைவாக வடக்குக்கு செல்வதையே விரும்புவர். இவ்வாறாயினும் இதில் இரண்டில் ஒன்றையே தெரிவு செய்ய முடியும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## போலிக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்வைக்கிறார்கள். கடந்த ஆளும்தரப்பின் கொள்கைத்திட்டத்தையே செயற்படுத்துவதாகக் குறிப்பிடுகிறார்கள். எதிர்கட்சியில் உள்ள ஒரு சில முற்போக்கான உறுப்பினர்களின் கருத்துக்களும் அதிருப்திக்குரியன.

இந்த வரவு -செலவுத் திட்டம் எளிமையான வகையில் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய வகையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பெருந்தோட்ட மக்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் பெருந்தோட்ட மக்களை கவனத்திற் கொள்ளாதவர்கள் தற்போதைய சம்பள அதிகரிப்பு தொடர்பில் மாறுப்பட்ட குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள்.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில்தான் வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. கிராமிய அபிவிருத்தி, நகர உட்கட்டமைப்பு உள்ளிட்ட சகல துறைகளுக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. குற்றச்சாட்டுக்களை மாத்திரம் முன்வைக்கும் எதிர்க்கட்சியினர் சிறந்த விடயங்களை கவனத்திற் கொள்ளாமல் இருப்பது கவலைக்குரியது.

அரசுத்தலைவரால் முன்வைக்கப்பட்ட வரவு -செலவுத் திட்டம் தொடர்பில் எதிர்க்கட்சியினர் முன்வைக்கும் சிறந்த யோசனைகளை ஏற்றுக்கொள்வோம். குறுகிய அரசியல் நோக்கத்தை முன்னிலைப்படுத்தி போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதை எதிர்க்கட்சியினர் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

தொடர்ச்சி 6ம் பக்கம்....


JDr
JDR CARE HOME
&
MEDICALS
முத்த பிரஜைகளுக்கான
பூரண வசதிகளுடனான
பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane,
Jaffna

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வீதிகளில் பெருகும் உயிரிழப்புகள்: ஆளும்தரப்பினது பொறுப்பின்மை!

இலங்கையில்தினந்தோறும்நிகழும்வீதிவிபத்துக்கள், தற்போது தேசியப் பேராபத்தாக மாறியுள்ளன. ஒவ்வொரு நாளும் சராசரியாக 8 முதல் 10 பேர் வரை உயிரிழப்பதுடன், பலர் தீவிர காயங்களுடன் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். கடந்த ஆண்டு மட்டும் மொத்தம் 2,500க்கும் மேற்பட்ட உயிரிழப்புகள் மற்றும் 20,000க்கும் மேற்பட்ட காயங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்தப் புள்ளிவிவரங்கள் வீதிகள் எவ்வாறு சாவுப் பொறிகளாக மாறியுள்ளன என்பதை வெளிப்படுத்துகின்றன.

### கவனக்குறைவின் விளைவுகள்

அதிகமான விபத்துக்கள் ஏற்படுவதற்குக் காரணம், வாகன ஓட்டிகளின் கவனக்குறைவும் போக்குவரத்து விதிமுறைகளை மீறுவதும்தான். அலைபேசியில் பேசிக்கொண்டு வாகனம் ஓட்டுதல், மது அருந்தி வாகனம் ஓட்டுதல், அத்துடன் சட்டபூர்வ வேக வரம்புகளை மீறுதல் ஆகியன முக்கியமான காரணிகளாகும். குறிப்பாக இளைஞர்கள் இடையே நடைபெறும் மோட்டார் சைக்கிள் விபத்துக்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் 40% வரை உயர்ந்துள்ளன. பல நேரங்களில் பாதிக்கப்பட்டவர்கள் குடும்பத்தின் முதன்மை ஆதாரமாக இருப்பதால், ஒவ்வொரு விபத்தும் ஒரு குடும்பத்தைச் சிதைக்கும் துயரமாக மாறுகிறது.

### நடைமுறை தோல்வி

அரசு அதிகாரிகள், அமைச்சர்கள் அனைவரும் மீண்டும் மீண்டும் ‘வீதிகளில் ஒழுங்கு ஏற்படுத்தப்படும்’, ‘விபத்துக்களைத் தடுக்க கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்’ என உறுதி அளிக்கிறார்கள். ஆனால் நடைமுறையில் அத்தகைய நடவடிக்கைகள் பெரும்பாலும் பேச்சளவிலேயே முடிகின்றன. சில சமயங்களில் குறுகிய காலத்துக்குள் காவல் துறை கண்காணிப்புகள் வலுப்படுத்தப்படுகின்றன; ஆனால் சில வாரங்களுக்குப் பிறகு மீண்டும் பழைய நிலையே நிலவுகிறது. வாகன பரிசோதனைகள், சாரதி அனுமதிப்பத்திர சரிபார்ப்புகள், சாலை பராமரிப்பு போன்றவை அலட்சியத்தால் பிந்தங்கியுள்ளன.

### ஆளும்தரப்பின் பொறுப்பின்மை

இந்த நிலை தொடர்ந்தால், வருங்காலத்தில் வீதி விபத்துகள் இன்னும் அதிகரிக்கக் கூடும். ஆளும்தரப்பு, போக்குவரத்து துறை மற்றும் காவல்துறை இணைந்து தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் விழிப்புணர்வு திட்டங்களை செயல்படுத்த வேண்டியது அவசியம். பள்ளிகளில் இருந்து பெரியவர்கள்வரை அனைவரிடமும் சாலை பாதுகாப்பு குறித்த கல்வி பரவல் ஏற்படுத்தப்பட வேண்டும். மேலும் வாகன பராமரிப்பு நிலையங்கள் மற்றும் ஓட்டுநர் பயிற்சி மையங்கள் மீது கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்படவேண்டும்.

வீதிவிபத்துகள் என்பது வெறும் புள்ளிவிவரம் அல்ல அது மனித உயிர்களின் இழப்பு. ஒவ்வொரு விபத்தும் ஒரு தந்தையை, தாயை, சகோதரனை அல்லது குழந்தையை இழக்கச் செய்கிறது. அரசாங்கமும் சமூகமும் இதை சாதாரணச் செய்தியாக அல்ல, ஒரு தேசிய அவசர நிலையாக கருதி உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம். சொற்கள் அல்ல, செயலில் பொறுப்புணர்வு வெளிப்பட வேண்டும். இல்லையெனில், நம் வீதிகள் தொடர்ந்தும் மரணவீதிகளாகவே மாறிக்கொண்டே இருக்கும்.

# சண்டியர் போன்று வந்த கோட்டா தப்பியோடும் நிலையே ஏற்பட்டது

## சாமர சம்பத் எம்.பி. சுட்டிக்காட்டு

பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு விவசாயிகள் தொடர்பில் எடுத்துள்ள தீர்மானத்தை ஆளும்தரப்பு மீள்பரிசீலிக்க வேண்டும். மக்கள் எதிர்ப்பு என்றால் எதனையும் செய்ய முடியாது. பின்வாங்க வேண்டும். கோட்டாபய ராஜபக்ச இதற்கும் மேல் பெரிய சண்டியர் போன்றே வந்தார். இறுதியில் பின்கதவால் படகில் தப்பிச் செல்லும் நிலைமையே அவருக்கு ஏற்பட்டது என்பதை நினைவில் கொள்ளுங்கள் என புதிய ஜனநாயக முன்னணியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முழு நாடும் ஒன்றாக என்று போதைப் பொருளுக்கு எதிரான வேலைத்திட்டம் தொடங்கப்பட்டு இரண்டு நாட்களில் பேலியகொட மாநகர சபை உறுப்பினரின் கணவன் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டார். இதேவேளை ஒரு மாதத்திற்கு முன்னர் தெகிவளை கல்கிசை நகர சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவரின் மகன் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டிருந்தார். இவ்வாறான நிலமையில் போதைப் பொருள் குற்றவாளிகளின் ஒளிப்படங்களை ஊடகங்களில் வெளியிட வேண்டாம் என்று பொலிஸ் மா அதிபர் கூறியுள்ளார். இப்போதுதான் அவருக்கு அது தெரிகின்றது. இதற்கு முன்னர் வெளிநாட்டில் இருந்து செவ்வந்தி உள்ளிட்ட குற்றக் கும்பலை சேர்ந்தவர்களை அழைத்து வரும்போது ஒளிப்படங்களை வெளியிட்டு பொலிஸாரே பரப்புரை செய்த்தத பொலிஸ்மா அதிபருக்கு இப்போதுதான் நினைவுக்கு வந்துள்ளது.

பேலியகொட நகரசபையின் குறித்த உறுப்பினர் இன்னும் கைது செய்யப்படவில்லை. அதுபோன்று தெஹிவளை கல்கிசை நகர உறுப்பினர் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆளும்தரப்புக்குச் சார்பானவர்கள் கைது செய்யப்படும் போது தான் சந்தேகநபர்களின் இரகசியம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது பொலிஸாருக்கு தெரிய வந்துள்ளது .

வரவு செலவுத் திட்ட விடயத்தில் புத்தாண்டுக்குச் சலுகைப் பொதியொன்றை வழங்குவதாகவும் அதற்காக 1000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் கடந்த வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டனர். ஆனால் அடுத்த புத்தாண்டும் வரப் போகின்றது. ஆனால் இன்னும் மக்களுக்கு அது கிடைக்கவில்லை. கடந்த வரவு செலவுத் திட்டத்தில் முன்னேற்றமடைந்துள்ள நிறுவனமாக ஷ்ரீலங்கன் விமான சேவை உள்ளது. அதற்காக 20, 000 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது. இப்படி நிதி வழங்கினால் அது முன்னேற்றம் காணாமல் இருக்குமா? நாட்டில் 14,500 கிராம சேவகர் பிரிவுகள் உள்ளன. ஷ்ரீலங்கன் விமான சேவைக்கு வழங்கிய பணத்தை பிரித்துப் பார்தால் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுக்கும் 17 இலட்சம் ரூபா என்ற அடிப்படையில் நிதியை வழங்கியிருக்கலாம்.

தற்போது வெங்காய விவசாயிகள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். அரசுத் தலைவர் உள்ளிட்ட மூன்று அமைச்சர்கள் அநுராதபுரம் மற்றும் மாத்தளையைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர். ஆனால் அவர்களால் அந்த விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியவில்லை. தம்புள்ளைச் சந்தையில் உள்ளவர்கள் வீதிக்கு இறங்கிப் போராட்டம் நடத்தும் நிலமை உருவாகியுள்ளது. பொருளாதார மத்திய நிலையம் தொடர்பில் தேவையற்ற வேலைகளைச் செய்யப்போய் அங்கிருக்கும் அனைவரையும் கோபத்திற்கு உள்ளாக்கப் போகின்றனர். மக்கள் எதிர்ப்பு என்றால் அதனை எப்படியும் செய்ய முடியாது. பின்வாங்க வேண்டும்.

கோட்டாபய ராஜபக்ச இதற்கும் மேல் பெரிய சண்டியர் போன்றே வந்தார். இறுதியில் பின்கதவால் படகில் தப்பிச் செல்லும் நிலைமையே அவருக்கு ஏற்பட்டது என்பதனை நினைவில் கொள்ளுங்கள்.

இதேவேளை பிணையின்றி கடன் வழங்குவதாக அரசுத் தலைவர் கூறியுள்ளார். ஆனால் எவருக்காவது பிணையின்றி கடன் கிடைத்துள்ளதா? இல்லையே. மைத்திரிபால சிறிசேன பொலனறுவையை சேர்ந்தவர். அவர் அந்த மாவட்டத்தை அபிவிருத்தி செய்துள்ளார். அதேபோன்று மகிந்தவும் அம்பாந்தோட்டையை அபிவிருத்தி செய்துள்ளார். அத்துடன் கோட்டாபய ராஜபக்ஸ கொழும்பில் அபிவிருத்தி செய்துள்ளார்.

நீங்கள் நாளுக்கு நாள் பிரச்சினைகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டாம். மக்கள் வீதிக்கு இறங்கும் நிலமை வரும். உங்களுக்கு அதிகளவில் மக்கள் வாக்களித்தனர். ஒவ்வொரு மாவட்டத்திலும் இலட்சக்கணக்கில் மக்கள் வாக்குகளை வழங்கினர். நீங்கள் அந்தச் சாதனைகளை உடைத்துக்கொள்ள வேண்டாம். நிமல் சிறிபால டி சில்வா போன்றோர் உங்களைப் போன்று சாதனை வாக்குகளை பெற்றனர். இறுதியில் இப்போது வீட்டில் இருக்கின்றார். இது போன்ற நிலைமை உங்களுக்கும் வரும்- என்றார்.

# இலங்கை – சவூதி இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்த முயற்சி

இலங்கைக்கும் சவூதி அரேபியாவுக்கும் இடையிலான இருதரப்பு அரசியல் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து இரு தரப்பு அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சுற்றுலா அமைப்பின் 26ஆவது பொதுச் சபையில் கலந்துகொள்வதற்காக சவுதி - ரியாத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அயலுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத், அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் ஃபைசல் பின் ஃபர்ஹானை சந்தித்துள்ளார். இந்த சந்திப்பின் போதே இவ்விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் முதலீட்டுக்கு உகந்த சூழல் குறித்து அமைச்சர் விஜித ஹேரத் சவூதி அரேபிய அயலுறவுத்துறை அமைச்சருக்கு எடுத்துரைத்ததுடன், நாட்டின் பல்வேறு துறைகளில் வளர்ந்து வரும் வாய்ப்புகளை ஆராயுமாறு சவூதி தனியார் துறைக்கு அழைப்பு விடுத்தார். மேலும், தனியார் துறை ஈடுபாடு மற்றும் வர்த்தக உறவுகளை மேம்படுத்துவதற்கான தளமாகச் செயற்படும் வகையில், இரு நாடுகளின் வர்த்தகச் சபைகளின் சம்மேளனங்களுக்கு இடையிலான முதல் வர்த்தகக் கவுன்சில் தமது பயணத்தின்போது உருவாக்கப்படும் என்பதையும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கைக்கும் சவூதி அரேபியாவுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவை புதிய உச்சத்திற்கு கொண்டு செல்லத் தாங்கள் கொண்டுள்ள பகிரப்பட்ட உறுதிப்பாட்டை இரு அமைச்சர்களும் மீண்டும் உறுதிப்படுத்தினர். மத்திய கிழக்கில் சமாதானத்தை ஊக்குவிப்பதில் சவூதி அரேபியாவின் தலைமைத்துவத்தை அமைச்சர் விஜித ஹேரத் பாராட்டினார், அத்துடன் பலஸ்தீனக் காரணிக்கான இலங்கையின் அசைக்க முடியாத ஆதரவையும் அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

இச்சந்திப்பின்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான நீடித்த நல்லுறவில் ஒரு குறியீட்டு மைல்கல்லாக, இரு நாடுகளுக்கிடையேயான இராஜதந்திர உறவுகள் ஸ்தாபிக்கப்பட்ட 50ஆவது ஆண்டு நிறைவை நினைவுகூரும் வகையில் சவூதி அஞ்சல் சேவையால் வெளியிடப்பட்ட நினைவு முத்திரைகளை சவுதி வெளிவிவகார அமைச்சர் ஃபைசல் பின் ஃபர்ஹான் உத்தியோகபூர்வமாக அமைச்சர் விஜித ஹேரத்திடம் வழங்கினார்.

# அரச துறையில் 10 ஆயிரம் பேரின் பணியை நிரந்தரமாக்க நடவடிக்கை

## ஆளும்தரப்பு அறிவிப்பு

அரச துறை மற்றும் கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றிலுள்ள சுமார் 10,000 நிரந்தரமற்ற நிலையிலுள்ள ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளதாக போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிமல் ரத்னாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சத்தியலிங்கம் தமது கேள்வியின்போது, சுமார் பத்தாயிரம் தற்காலிக, அமைய அடிப்படையிலான ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கு ஆளும்தரப்பு மேற்கொண்டுள்ள தீர்மானத்தில் தொடருந்துக் கடவைக் காப்பாளர்களும் உள்ளடக்கப்படுகின்றனரா என வினவினார். அதற்கு அமைச்சர் தொடர்ந்து பதவளிக்கையில் தெரிவித்ததாவது:

தொடருந்து கடவைக் காப்பாளர்களுக்கு அவர்கள் இதுவரை பெற்று வந்த 7500 ரூபா கொடுப்பனவை பதினையாயிரம் ரூபாவாக அதிகரிப்பதற்கு வரவு செலவுத் திட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது . எனினும் அதன் மூலம் தொடருந்து கடவைகளில் நிலவும் பாதுகாப்பற்ற நிலைமை முழுமையாக நிவர்த்தியடையும் என நாம் கூற முடியாது. அதற்கு நீண்ட கால வேலைத் திட்டம் ஒன்றை நாம் முன்னெடுக்க வேண்டியது அவசியம்.

ஆளும்தரப்பான நிரந்தரமற்ற சேவை நிலையில் உள்ளவர்களை ஒவ்வொரு மட்டத்தில் சேவைகளுக்காக நியமித்துள்ளது. அத்தகைய சுமார் 9,800 பேரை நிரந்தரமாக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அவற்றில் சில தொழில்துறைகளில் தற்காலிக பணியாளர்களை இணைத்துக்கொண்டாலும் அவர்கள் தேவையான கல்வித் தகைமையைக் கொண்டிருக்கவேண்டும். அந்த வகையில் தொடருந்து கடவைக் காப்பாளர்கள் மட்டுமன்றி வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்களைக் குறிப்பிடும்போது அவர்களில் 700 பேருக்கு நாம் நியமனங்களை வழங்கினோம் மேலும் 300 பேர் உள்ளனர். அவர்கள் கல்விப் பொது தராதர சாதாரண தர பரீட்சையில் தோற்றியிருக்கவேண்டும். சித்தியடைந்தமை தொடர்பில் கவனத்திற் கொள்ளப்படவில்லை.

அதன் பிரகாரம் தொடருந்து கடவை காப்பாளர்களுக்கும் அவ்வாறான தகைமை கோரப்படுகிறது. அந்த வகையில் அணைவரையும் ஆளும்தரப்பு நிரந்தரமாக்கும் என்பதை என்னால் கூற முடியாது. பொதுவாக சுமார் 10,000 நிரந்தரமற்ற ஊழியர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக அரச துறை மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றிலுள்ள தற்காலிக மற்றும் அமைய என நிரந்தரமற்ற நிலையிலுள்ள ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கு ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளது - என்றார்.

# நாடாளுமன்றத்தில் நேற்று அருச்சுனாவிற்கு எச்சரிக்கை

## வெளியேற்றுவேன் என்றார் சபாநாயகர்

சபையில் தொடர்ந்தும் இடையூறு ஏற்படுத்திக்கொண்டிருந்தால் சபையில் இருந்து வெளியேற்ற நேரிடும் என்று சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன எதிர்க்கட்சி உறுப்பினர்களான சுஜீவ சேனசிங்க மற்றும் சுயேச்சைக்குழு உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் ஆகியோரைக் கடுமையாக எச்சரித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் நாள் விவாதத்தின்போது, அமைச்சர் வசந்த சமரசிங்க உரையாற்றுகையில், சுஜீவ சேனசிங்க மற்றும் அருச்சுனா ஆகியோர் தொடர்ச்சியாக ஒழுங்குப் பிரச்சினைகளை எழுப்பிக்கொண்டிருந்த போதே சபாநாயகர் இவ்வாறு எச்சரித்தார்.

அமைச்சர் வசந்த சமரசிங்க வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பில் சுஜீவ சேனசிங்க ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பி எழுந்த போது, உங்களின் பெயர் குறிப்பிடப்படவில்லை. இதனால் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்ப முடியாது என்று சுஜீவ சேனசிங்கவுக்கு சபாநாயகர் கூறினார். எனினும் சுஜீவ சேனசிங்க தொடர்ந்தும் ஒழுங்கு பிரச்சினையை எழுப்பிக்கொண்டிருந்தார். இவ்வேளையில் தயவு செய்து நீங்கள் அமர்ந்துகொள்ளுங்கள். நீங்கள் இங்கே இடையூறுகளை ஏற்படுத்திக்கொண்டிருந்தால் உங்களை வெளியேற்ற நேரிடும் என்று எச்சரித்தார்.

இதேவேளை யாழ். மாவட்ட சுயேச்சை நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனாவும் தொடர்ந்து ஒழுங்கு பிரச்சினையை எழுப்பிக்கொண்டிருந்தார். அது ஒழுங்குப் பிரச்சினை அல்ல. இதனால் அமைச்சரை தொடர்ந்தும் பேசுமாறு சபாநாயகர் கூறிக்கொண்டிருந்தார். இந்நிலையில் தொடர்ந்தும் அர்ச்சுனா ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பிக்கொண்டிருந்தபோது, நீங்களும் இடையூறு ஏற்படுத்திக்கொண்டிருந்தால் இங்கிருந்து வெளியேற்ற நேரிடும் என்று சபாநாயகர் எச்சரித்தார்.



## போலிக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையான பொருளாதார மீட்சி இந்த வரவு செலவுத் திட்டத்தின் பிரதான இலக்காகும். எதிர்க்கட்சியினர் குறிப்பிடுவதை போன்று வரையறையற்ற வகையில் நிதி ஒதுக்கியிருந்தால்' பொருளாதார பாதிப்புக்கு மத்தியில்ஏன்இவ்வாறுநிதி ஒதுக்கப்பட்டுள்ளது' என்று குறிப்பிடுவார்கள். வரவு - செலவுத் திட்டத்தின் முன்மொழிவுகளை சிறந்த முறையில் செயற்படுத்துவோம் - என்றார்.

## அத்தியாவசியப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2026ஆம்ஆண்டுக்கானவரவு-செலவுத் திட்டம் பற்றி எதிர்க்கட்சியினர் மாத்திரமே குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள். சர்வதேசநாணயநிதியத்தின்வரவு-செலவுத் திட்டம் என்று குறிப்பிடுகிறார்கள். நடுத்தர மக்கள் குறித்துக் கவனம் செலுத்தவில்லை என்று குறிப்பிடுகிறார்கள்.

வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் எதிர்க்கட்சியினர் வெறுப்பை முன்னிலைப்படுத்தி பேசுகிறார்கள். ஊழல் மோசடி பற்றி பிணைமுறி மோசடி பற்றி அடிக்குறிப்பு எழுதியவர்கள் இப்படிப் பேசுவது வேடிக்கையாகவுள்ளது. ஊழல் மோசடிக்கு எதிராக நடவடிக்கைகளை எடுத்துள்ளதால் எதிர்க்கட்சிகள் ஆளும்தரப்பின் மீது பல குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள்.

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளை குறைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தேசிய உற்பத்திகளை அதிகரித்து மக்களுக்கு நிவாரமளிப்போம். பொருளாதார மீட்சிக்குரிய எந்த நடவடிக்கைகளையும் ஆளும்தரப்பு எடுக்கவில்லை. 2028 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரசமுறைக் கடன்களைச் செலுத்துவது நெருக்கடிக்குள்ளாக்கப்படும் என்று எதிர்க்கட்சியினர் குறிப்பிடுகிறார்கள்.

பொருளாதார மீட்சி, வெளிநாட்டுக் கடன்களைச் செலுத்தல் பற்றி எதிர்க்கட்சிகள் அச்சமடையவேண்டியதில்லை. பொருளாதார முகாமைத்துவத்திற்கான நடவடிக்கைகள் சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2028ஆம் ஆண்டு முதல் அரசமுறை கடன்கள் செலுத்தப்படும் என்றார்

## இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்கள அதிகாரிகள், ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தினர். அவர்களைநவம்பர்24வரைவிளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கைக்கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டவேளை ஏற்கனவேகைதுசெய்யப்பட்டுவிளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் 29 பேரில் 26 பேருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும், மூவருக்கு 6 மாத கட்டாயசிறைத்தண்டனையும்விதிக்கப்பட்டது.

செப்டெம்பர் 28 மற்றும் ஒக்டோபர் 9 ஆகிய நாள்களில் இரண்டு படகுகளுடன் நெடுந்தீவுக் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 29 இந்திய மீனவர்களின் வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெற்றது. இதன்போது சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் மீனவர்கள் மன்றுக்கு அழைத்துவரப்பட்டனர்.

வழக்கை ஆராய்ந்த நீதிவான் நளினி, 26 மீனவர்களுக்கு 6 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட 2 வருட சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

இரண்டு படகுகளின் ஓட்டிகளுக்கும் ஒரு படகு உரிமையாளருக்கும் 6 மாத கட்டாய சிறைத் தண்டனையும், ஒவ்வொருவருக்கும் தலா 4 மில்லியன் ரூபா அபராதத் தொகையும் செலுத்துமாறும் உத்தரவிட்டார். அதனைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் மேலும் 3 மாதங்கள்சிறைத்தண்டனையைஅனுபவிக்க வேண்டும் நீதிவான் தீர்ப்பளித்தார்.

## பாடசாலை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டமும் காணப்படுகிறது. அரசுத் தலைவர் அநுரகுமார எதிர்கட்சி உறுப்பினராக இருந்தபோது அரச சேவையாளர்களின் பிரச்சினைகள் பற்றிப் பேசினார். வீதிக்கு இறங்கிப் போராடினார். ஆனால் இன்று வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து விட்டு அரச அதிகாரிகள் பொறுமையாக இருக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார். இது எந்தளவுக்கு நியாயமானது?

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை ஆளும்தரப்பு நிறைவேற்றவில்லை. ஆளும்தரப்பின் மீதான மக்களின் நம்பிக்கை சிதைவடைந்துள்ளது. ஆளும்தரப்பு வெளிப்படைத்தன்மையுடன் செயற்படும் நிலைமையை காண முடியவில்லை. இந்தியாவுடன்கைச்சாத்திடப்பட்டஒப்பந்தங்கள் மற்றும் அமெரிக்காவின் தீர்வை வரி இணக்கப்பாட்டுக்கு ஏற்றுக்கொண்ட நிபந்தனைகள் என்பன இன்றுவரை வெளிப்படுத்தப்படவில்லை.

முறையற்ற வகையில் கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமை பற்றித் தொடர்ச்சியாக கேள்வியெழுப்பினோம். உண்மை வெளிப்படுத்தப்படவில்லை. ஆனால் பொறுப்புக் கூறவேண்டிய அமைச்சர் மாத்திரம் அமைச்சு பதவியில் இருந்து நீக்கப்பட்டார். ஊழல் மோசடிக்கு எதிராகச் செயற்படுவதாக ஆளும்தரப்பு குறிப்பிடுவது எதிர்க்கட்சியின்உறுப்பினர்களுக்குமாத்திரமே வரையறுக்கப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் முன்மொழிவுகள் பல நிறைவேற்றப்படவில்லை. இவ்வாறான நிலையில் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்திலும் பல முன்மொழிவுகள் காணப்படுகின்றன.

பாடசாலைமாணவர்களுக்குஅடுத்தாண்டு முதல் 6000 ரூபா வழங்குவதாக அரசுத் தலைவர் குறிப்பிடுகிறார். இந்த 6000 ரூபாய் கொடுப்பனவு சகல மாணவர்களுக்கும் கிடைப்பதில்லை. ஆகவே பாடசாலை உபகரணங்கள் மற்றும் எழுதுவினை பொருட்கள் மீதான 'வற்' வரியை ஆளும்தரப்பு குறைக்க வேண்டும்.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள வர்களுக்கு குறிப்பாக நடுத்தர மக்களுக்கு அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைத்தே நிவாரணமளிக்க முடியும். வாழ்க்கை செலவு அதிகரிப்பை குறைப்பது குறித்து வரவு - செலவுத் திட்டத்தில் எவ்வித முன்மொழிவுகளும்முன்வைக்கப்படவில்லை - என்றார்.

## சரத்பொன்சேகாவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சி இடம்பெற வேண்டும். வெற்றிகள் என்பது அடிமட்ட மக்கள் வரை கொண்டு செல்லப்பட வேண்டும் என்பது இந்த வரவு செலவுத்திட்டத்தின் முன்னுரையாகக் காணப்பட்டது.

அதன் அடிப்படையில் இந்த நாட்டில் புரையோடிப்போயுள்ளதேசியஇனப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டும். இது தீர்க்கப்படுவதும் வரவு செலவுத் திட்டத்திற்கு சாதகமாகவே அமையும். இது தீர்க்கப்பட்டால் எமது புத்திஜீவிகள், பொருளாதார வல்லுநர்கள், நாடு கடந்து வாழ்கின்றவர்கள் எல்லாம் நாட்டுக்குள் வருகின்றபோது இந்த நாட்டின் பொருளாதாரத்தை வடக்கு, கிழக்கில் மாத்திரமல்லாது நாடு முழுவதும் உயர்த்த முடியும்.

2009ஆம் ஆண்டு போர் முடிவடைந்தது. தற்போது16ஆண்டுகள்நிறைவடைந்துள்ளன. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பொறுப்புக்கூறல் என்ற விடயத்தை கையில் எடுக்க வேண்டுமெனச்சொல்லப்பட்டது. அந்த அடிப்படையில் பார்க்கின்றபோது இந்த இறுதிப் போரில் மனிதப் பேரவலம் இடம்பெற்றது. மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றன. இதற்கு அரசு பொறுப்புக்கூறவேண்டும். உண்மைகளைக் கண்டறிய வேண்டும். பரிகார நீதி வழங்க வேண்டும். மீண்டும் இவ்வாறான அவலங்கள் ஏற்படாது தடுக்க வேண்டும்என்றகருத்துக்கள்சொல்லப்பட்டன. ஆனால் இன்னும் அந்த விடயங்கள் நிறைவேற்றப்படவில்லை.

நாட்டின் பொருளாதாரத்தோடு இந்தப் பிரச்சினைக்கு நெருக்கமான தொடர்பிருக்கின்றது. வடக்கு கிழக்கில் போரால் பாதிக்கப்பட்ட மக்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்கள், அரசியல் கைதிகள், காணி அபகரிப்புக்கள் தொடர்பாகவும் பேச வேண்டியிருக்கின்றது.

கடந்த காலங்களில் பாலியல் பலாத்காரங்கள்,பாலியல் வன்கொடுமைகள் நடைபெற்றிருந்தன. மத்திய முகாம் என்ற இடத்தில் கோணேஸ்வரி என்ற தாய் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொலைசெய்யப்பட்டிருந்தார். அதேபோன்று சாரதாம்பாள் புங்குடுதீவில் படுகொலைசெய்யப்பட்டிருந்தார். கிருஷாந்தி செம்மணியில் கொலைசெய்யப்பட்டிருந்தார். இசைப்பிரியா என்ற விடுதலைப் புலிகளின் ஊடகவியலாளர் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்த இடத்தில் இது தொடர்பில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஒரு முக்கிய விடயத்தை சொல்லியுள்ளார். அவர் தானாக முன்வந்து சில ஒப்புதல் வாக்கு மூலங்களை ஊடகங்களுக்குச் சொல்லி வருகின்றார். அந்த வாக்கு மூலங்களின் அடிப்படையில் பார்க்கின்றபோது இசைப்பிரியா படு மோசமாக பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டமைக்கு காரணமாக இருந்தவர் புலனாய்வு பணிப்பாளர் கபில கெந்தவிதாரண என்பவர். சரத்பொன்சேகா சொல்லியுள்ளார். அத்தோடு ஜகத் ஜயசூரிய என்பவரைப் பற்றியும் சொல்லியுள்ளார்.

போருக்குத் தலைமைதாங்கிய பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஒரு சாட்சியமாக இந்த விடயங்களை ஒப்புக்கொண்டுள்ளார். வெள்ளைக்கொடியுடன் வந்தவர்கள் கூடப் படுகொலை செய்யப்பட்டுளார்கள். இதற்குக் காரணமானவர் சவேந்திரசில்வா என்றும் சொல்லியுள்ளார்.

இவ்வாறான நிலையில் உள்நாட்டுப் பொறிமுறை தொடர்பில் இந்த ஆளும்தரப்பு அடிக்கடி வலியுறுத்தி வருகின்றது. இந்த நிலையில்தான் போருக்குத்தலைமைதாங்கிய பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா இராணுவம் செய்ய குற்றங்கள் தொடர்பில் வாக்குமூலம் கொடுத்துள்ளார். எனவே இந்த விடயம் ஆராயப்படவேண்டும். தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்புக்கு போர்க்குற்ற சாட்சியங்கள் தானாகவேகிடைத்துள்ளன. எனவேஇவற்றை இந்த அரசு கையாளவேண்டும். தேசிய இனப்பிரச்சினை தொடர்பான விடயங்களை இந்த அரசு துரிதமாக கையாளவேண்டும் - என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# உடுவிலைச் சேர்ந்தவர் நேற்று கைது கொட்டாஞ்சேனை சூட்டு சம்பவத்தில்

கொழும்பு - கொட்டாஞ்சேனையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துக்கு உதவி புரிந்தார் என்ற குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் - உடுவிலைச் சேர்ந்த ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் இவர் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் காரில் பயணித்தபோது கைது செய்யப்பட்டார் என்றும் அவர் பயணித்த காரில் இருந்து வாள், 5 ஆயிரம் வரையான போதை மாத்திரைகள் என்பன கைப்பற்றப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் பயணித்த கார் போலி இலக்கத் தகடு கொண்ட கார் என்பது பின்னர் விசாரணையில் கண்டறியப்பட்டது. அவரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்திய பின்னர் கொழும்பு விசேட பொலிஸ் குழுவினரிடம் ஒப்படைக்கவுள்ளனர்.

கொட்டாஞ்சேனை துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் மூவர் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் கொழும்பில் இருந்து வந்த விசேட பொலிஸ் குழுவால் மேலதிக விசாரணைக்காக ஏற்கனவே கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

# சட்டவிரோத சொத்துக் குவிப்பா? விற்பனை நிலையத்தில் சோதனை



யாழ்ப்பாணத்தில் சட்டவிரோத சொத்துக் குவிப்பு என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் வர்த்தகர் ஒருவரின் விற்பனை நிலையத்தில் நேற்று சோதனை நடத்தப்பட்டது. யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் ஆனைப்பந்தி பகுதியில் உள்ள வாகன விற்பனை நிலையமொன்றிலேயே பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப் படையினர் சுற்றி வளைப்பை மேற்கொண்டனர்.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸாரால் பெற்றுக்கொள்ளப்பட்ட தேடுதல் அனுமதிக்கமைய இந்தச் சோதனை நடத்தப்பட்டது. சட்டவிரோதமாகச் சொத்துச் சேர்த்த சிலருக்கு எதிராக, யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வழக்கு பதிவு செய்துள்ளனர். இதனடிப்படையில் நடத்தப்பட்ட விசாரணையில் ஒருவரின் கையடக்கத் தொலைபேசிக்கு இன்னொருவரிடம் இருந்து கைத்துப்பாக்கியின் புகைப்படம் அனுப்பப்பட்டிருந்தமை பொலிஸ் விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் ஒரு கட்டமாக அந்த நபரின் விற்பனை நிலையத்தில் சோதனை நடத்தப்பட்டதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இந்தியாவிலிருந்து கடத்தி வரப்பட்ட பீடி இல்லைகள் மன்னாரில் சிக்கின

## 3 சந்தேகநபர்களும் கைது

மன்னார் ஓலைத்தொடுவாய் கடற்கரைப் பகுதியில் கடந்த சனிக்கிழமை இலங்கைக் கடற்படை நடத்திய சிறப்புத் தேடுதல் நடவடிக்கையின்போது சுமார் ஆயிரத்து இருநூற்று பதினொரு (1211) கிலோகிராம் பீடி இலைகள் கைப்பற்றப்பட்டன. அவற்றைக் கடத்தி வரப் பயன்படுத்தப்பட்ட ஒரு டிங்கி படகைக் கைப்பற்றிய கடற்படையினர் மூன்று சந்தேகநபர்களையும் கைது செய்துள்ளனர்.

கடல் வழிகள் ஊடான கடத்தல் உட்பட சட்டவிரோத நடவடிக்கைகளை எதிர்த்து தீவைச் சுற்றியுள்ள கடல் மற்றும் கடற்கரைகளை உள்ளடக்கி கடற்படை வழக்கமான சுற்றுக்காவல் மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. அதன்படி, வடமத்திய கடற் படைக் கட்டளைக்கு சொந்தமான இலங்கை கடற்படை கப்பல் கஜபா, 2025 நவம்பர் 08 இரவு நடத்திய இந்தச் சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, மன்னார் ஓலைதொடுவாய் கடற்கரைப் பகுதியில் சந்தேகத்திற்கிடமான டிங்கி படகொன்று சோதனை செய்யப்பட்டது. அதிலிருந்தே பீடி இலைகள் மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் கற்பிட்டியின் துரையடி மற்றும் ஜனசவி புர பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். மேலும், டிங்கி படகு மற்றும் பீடி இலைகளுடன் சந்தேகநபர்கள், மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மன்னார் மதுவரி

# கூரிய வாள்களுடன் பெண் கைது

*ஏறாவூரில் பிரதேசத்தில் பெண் ஒருவரை இரண்டு கூரிய வாள்களுடன் ஞாயிற்றுக் கிழமை தாம் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.*

*மாவட்டப் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து ஏறாவூர் முதலாம் பிரிவிலுள்ள மைய வாடி வீதி மீராகேன் பிரதேசத்திலுள்ள வீடு ஒன்றைச் சுற்றிவளைத்தபோது அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த கூரிய இரு வாள்களை அவர்கள் மீட்டனர். அங்கிருந்த 41 வயதுடைய பெண் ஒருவரையும் கைது செய்தனர்.*

*இந்தப் பெண்ணின் கணவர் ஏற்கனவே போதை பொருளுடன் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.*



காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கையில் அதிகாரப் பகிர்வு நல்லிணக்கத்திற்கு வலுச் சேர்க்கும்

## சுவிஸ் தூதரக அதிகாரி கருத்து



தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வு நல்லிணக்கத் துக்கு வலுச்சேர்க்கும் என்று இலங்கைக்கான சுவிஸ் தூதரகத்தின் அரசியல்விவகாரங்களுக்குப் பொறுப்பான முதன்மைச் செயலர் ஜஸ்டின் பொய் லட் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நடைபெற்ற 'அரசியல் தீர்வும் பொறுப்புக்கூறலும்' என்ற ஆவணக் காப்பக அறிமுக நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். சட்டத்துக்கும் மனிதஉரிமைக்குமானகற்கைநிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் நல்லிணக்கத்துக்கும் பொறுப்புக்கூறுதலுக்கும் புதிய அரசமைப்பு சீர்திருத்தம் மிகவும் அவசியமாகும். தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வு நல்லிணக்கத்துக்கு வலுச் சேர்க்கும். இனங்களுக்கிடையில் ஏற்படுகின்ற நல்லிணக்கம், அமைதி மற்றும் வன்முறையற்ற சூழலை உருவாக்குவதோடு நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மையைப் பலப்படுத்தும். ஆகவே, இனங்களுக்கிடையில் கடந்த காலங்களில் ஏற்பட்ட கசப்பான சம்பவங்கள் இனியும் ஏற்படாமல் இருக்க நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்குப் புதிய அரசமைப்பு சீர்திருத்தம் மிகவும் அவசியம் என நம்புகின்றேன்- என்றார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர்கள், தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள், சட்டத்தரணிகள், சிவில் சமூக உறுப்பினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். கலந்துரையாடலும் இடம்பெற்றது.

# மன்னார் காற்றாலைக்கு எதிராக மக்கள் 100ஆவது நாளில் தீப்பந்தப் போராட்டம்

மன்னாரில்காற்றாலைமின்கோபுரங்கள்அமைப்பதற்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் நேற்று நூறாவது நாளை எட்டியுள்ள நிலையில் நேறு இரவு 7.30 மணியளவில் தீப்பந்த எழுச்சி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டக் குழுவின் ஏற்பாட்டில்,அருட்தந்தை மாக்கஸ்அடிகளார்தலைமையில்இந்தத்தீப்பந்தஎழுச்சிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்தில் பலர் கலந்துகொண்டனர். போராட்டத்தில் மூன்று கோரிக்கைகளை மக்கள் சார்பில் அவர்கள் முன் வைத்துள்ளனர்.

மன்னார் தீவில் முன்னெடுக்கப்படும் 14 காற்றாலை மின் கோபுரங்கள் அமைக்கும் திட்டத்தை உடன் நிறுத்தி வேறு இடத்திற்கு மாற்றவேண்டும்.

மன்னார் தீவில் எந்த ஒரு இடத்திலும் கனிய மணல் அகழ்வுக்கு எந்த அனுமதியும் வழங்கக்கூடாது.

அமைக்கப்பட்ட (தம்பபவனி நறு விலிக்குளம்) 2 காற்றாலை உயர் மின் உற்பத்தி திட்டங்களினால் ஏற்பட்ட பாதிப்புக்களை உடன் நிவர்த்தி செய்தல்.

நேற்றுத் தொடக்கி வைக்கப்பட்ட தீப்பந்த எழுச்சிப் போராட்டம் இன்று முதல் கிராமங்கள் தோறும் இடம்பெறும் என போராட்டக்குழு சார்பாக அருட்தந்தை மாக்கஸ் அடிகளார் தெரிவித்துள்ளார்.

# அதிபர், ஆசிரியர்கள் டிசெ. 12 போராட்டம்

நாடளாவிய ரீதியில் ஆசிரியர்கள், அதிபர்கள் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு கோரி டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதி ஒரு நாள் அடையாள போராட்டத்தைத்தாங்கள்செய்யவுள்ளனர் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

வடக்கு மாகாணத்தில் இடமாற்றம் சம்பந்தமாக நடந்த முறைகேடுகளுக்கு எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதி மன்றத்தில் ஆசிரியர்களும் நாங்களும் இணைந்து வழக்கொன்றை தாக்கல் செய்திருந்தோம். அந்த வழக்கு இன்று (நேற்று) எடுக்கப்பட்டது. கல்வி அமைச்சு இதற்குப் பதிலளிக்கக் காலத்தைக் கேட்டிருக்கிறது. 11ஆம் மாதம் 24 ஆம் திகதி இந்த வழக்கு 3ஆவது தவணைக்காக போடப்பட்டிருக்கிறது.

இடமாற்றம் சம்பந்தமாக ஆசிரியர்களுக்கோ அதிபர்களுக்கோ நீதி மன்றத்திற்கு செல்ல வேண்டிய அவசியம் என்ன? கல்வி அதிகாரிகள் தான் இந்த பிரச்சினையைத் தீர்க்கவேண்டும். இடமாற்றம் காரணமாக பல பிரச்சினைகள் எழுந்தன. ஆசிரியர்கள் பல போராட்டங்களை மேற்கொண்டார்கள். ஒரு போராட்டம் தொடர்பிலும் ஆளுநர் தனது கவனத்தைச்செலுத்தவில்லை. மாகாணசபை இல்லை. இங்கு ஆளுநரின் வழிநடத்தலில் நிர்வாகம் நடைபெறுகிறது. ஆளுநரின் அலுவலகம் முன்பாக போராட்டம் நடைபெற்றபோதும்கூட ஆசிரியர்களுக்கு எந்தப் பதிலும் சொல்லாமல் ஆளுநர் பின் கதவால் தப்பிச் சென்றார்.

எங்கள் உரிமைகளுக்காக யாழ்ப்பாண மேல் நீதிமன்றத்திற்கு நாங்கள் வந்திருக்கிறோம். வடக்கு மாகாண கல்வி சம்பந்தமாக பல பிரச்சினைகள் உருவாகி இருக்கின்றன. இதற்கு ஒரு தீர்வு வழங்க வேண்டும். ஜனநாயக ரீதியாக இங்கு செயல்பாடுகளை காணவில்லை. ஆளுநர் என்.பி.பி. அரசின் பிரதிநிதியாகச் செயல்படுகிறார். ஆளுநர் பதவி என்பது என்.பி.பி. அரசுக்கு சொந்தமான பதவி அல்ல. அது பொதுவான பதவி.

புதிய கல்விச் சீர்திருத்தத்தை ஆளும்தரப்புக் கொண்டு வந்திருக்கிறது. இந்தக் கல்விச் சீர்திருத்தத்தை நாங்கள் கல்வி திருத்துமாகப் பார்க்கவில்லை. பாடத் திருத்தமாகவே நாங்கள் பார்க்கிறோம். காலை ஏழரை மணியில் இருந்து பிற்பகல் ஒன்றரை மணி வரை இருந்த பாடசாலை நேரத்தை இரண்டு மணி வரை மாற்றியுள்ளார்கள். இதை யாருடன் பேசிச் செய்தார்கள்? ஆசிரியருடன் பேசினார்களா? அதிபர்களுடன் பேசினார்களா? தொழிற்சங்கங்களுடன் பேசினார்களா? தன்னிச்சையாகவே அவர்கள் தீர்மானித்துள்ளார்கள். அடுத்த வருடம் முதலாம் ஆண்டுக்கும் ஆறாம் ஆண்டுக்கும் இந்த கல்வி சீர் திருத்தம் இருக்கின்றது. ஏழாம் ஆண்டிலிருந்து 13 ஆம் ஆண்டு வரை கல்வி சம்பந்தமாக பழைய பாடத்திட்டமே காணப்படும். இது ஓர் ஆயத்தம் இல்லாத செயற்பாடு.

ஆளும்தரப்பின் தன்னிச்சையான செயற்பாடு, வடக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றம், ஆசிரியர்களின் சம்பளம் முரண்பாட்டு என எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கோரி டிசெம்பர் 12 ஒரு நாள் அடையாள போராட்டத்திற்கு செல்ல நாங்கள் திட்டமிட்டுள்ளோம் என்றார்.

# கிணற்றில் தவறி வீழ்ந்து 4 வயதுச் சிறுவன் இறப்பு

## கரவெட்டியில் துயரம்

துன்னாலை வடக்கு, கரவெட்டி பகுதியில் வீட்டு கிணற்றில் தவறி விழுந்த நான்கு சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான். அதே இடத்தைச் சேர்ந்த அருண்நேரு அஸ்வந் என்ற சிறுவனே உயிரிழந்தான்.

சிறுவன் வீட்டில் தந்தையுடன் இருந்த நிலையில் நேற்றுக் காலை தந்தை உறக்கத்தால் கண் விழித்தபோது சிறுவனை காணாது தேடினார். அப்போது கிணற்றுக்குள் சிறுவன் காணப்பட்ட நிலையில், சிறுவனை மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். சிறுவன் ஏற்கனவே உயிரிழந்துவிட்டான் என அங்கு தெரிவிக் கப்பட்டது.

இந்த இறப்புத் தொடர்பில் பருத்தித்துறை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்சன் தயான் விசாரணை மேற்கொண்டார். நெல்லியடி பொலிஸார் புலன் விசாரணைகளை மேற்கொண்டமையுடன் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது

# கரடியனாற்றில் யானை தாக்கி பண்ணையாளர் ஒருவர் இறப்பு

மட்டக்களப்பு கரடியனாறு கார்மலை பகுதியில் மாடுகள் மேய்க்க சென்ற 55 வயதுடைய பண்ணையார் ஒருவர் யானை தாக்குதலுக்கு இலக்காகி உயிரி ழந்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொக்கட்டிச்சோலை முனைக்காடு பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதுடைய சோமசுந்தரம் வெள்ளைத்தம்பி என்ற பண்ணையாளரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் இந்தப் பண்ணையார் கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள கார்மலைப் பகுதிக்குச் சென்று இன்று காலை 11.00 மணியளவில் மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தபோது அங்கு திடீரென வந்த யானை அவரைத் தாக்கியதில் அவர் சம்பவ இடத்திலே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.11.2025இல் வெளியிடப்பெற்றது